ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1948/30 - 2016 ජනවාරි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.01.07

*1948/30 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் ஹக்மன நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் குழாய்க் கிணறு ஒன்றினை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, திசெம்பர் 29.
5/2/2/ 1168.

**அட்டவணை**

மாத்தறை மாவட்டத்தில் ஹக்மண பிரதேச செயலாளர் பிரிவில் இல. 295, கோங்கலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் கோங்கலை எனும் ஊரில் அமைந்துள்ள வல்கமகே கும்புர எனும் காணியில் காட்டப்பட்டுள்ள உரிமம்பெற்ற நிலஅளவையாளர் திரு. ஞானசிரி தஹநாயக்க அவர்களினால் அளவையிடப்பட்ட திட்ட இல. 2013/087 இலுள்ள காணித்துண்டு இல. 1 ஆக காட்டப்பட்டுள்ள மொத்த பிரமாணத்திலிருந்து 0.00723 ஹெக்டயர் (2. 86 பேர்ச்சஸ்) வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்த காணித்துண்டு:-

வடக்கு : மாத்தறையில் இருந்து ஹக்மன வரையான பிரதான வீதி ;
கிழக்கு : மாத்தறையில் இருந்து ஹக்மன வரையான பிரதான வீதி ;
தெற்கு : இக்காணியின் மீதித்துண்டு ;
மேற்கு : மாத்தறையில் இருந்து ஹக்மன வரையான பிரதான வீதி.

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* 01. திரு. எஸ். எம். வாகிஸ்ட்,
கோங்கல,
ஹக்மன.

1- 766

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் பதுளை நகர கழிவுநீர் மற்றும் மலவடிகாலமைப்புக் கருத்திட்டத்தில் அமைந்த சுத்திகரிப்பு தொகுதியினை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, திசெம்பர் 29.
5/2/1/ 1159.

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில் பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் ஹிந்தகொடை இல. 78K கிராம அலுவலர் பிரிவில் ஹங்வெல்லகம எனும் ஊரில் அமைந்துள்ள ஒதலாவ பஹல ஒதலாவ எனும் காணியின் மொத்த விஸ்தீரணத்திலிருந்து 01 ஏக்கர் 02 றூட் 32.92 பேர்ச்சஸ் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்துள்ள காணித்துண்டு :-

காணியின் பெயர் : ஒதலாவ பஹல ஒதலாவ ; விஸ்தீரணம் : 01 ஏக்கர் 2 றூட் 32.92 பேர்ச்சஸ் ; திட்ட இல. 535.

வடக்கு : குடாஓய வீதி ;
கிழக்கு : டிங்கிரி பண்டா உரிமை கொண்டாடும் வயல் நிலம் ;
தெற்கு : உபசேன அவர்கள் உரிமை கொண்டாடும் வயல் நிலம் ;
மேற்கு : குட்டயகொல்ல வீதி.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: திருமதி ஜீ. பீ. ஜ. வீரசூரிய,
"மாநெல்",
இல. 129/1, பன்சல வீதி,
களுத்துறை வடக்கு.

1- 767

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் வெலிவிட்ட நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் ஹோகந்தர நில நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, திசெம்பர் 29.
5/2/2/1172.

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தில் கடுவெலை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 225, அரங்கல கிராம அலுவலர் பிரிவில் ஹோகந்தர வடக்கு எனும் ஊரில் அமைந்துள்ள நாகஹ வத்தை அல்லாதவிடத்து தம்புகஹவத்தை எனப்படும் காணியிலிருந்து 60 பேர்ச்சஸ் வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்த காணித்துண்டு :-

வடக்கு : திரு. டபிள்யூ. ஏ. பெரேரா மற்றும் திரு. டபிள்யூ. ஈ. பெரேரா அவர்கள் உரிமைகோரும் நாகஹவத்தை அல்லாவிடத்து தம்புகஹவத்தை எனும் காணி ;

கிழக்கு : வீடுகளிற்கு செல்லும் பாதை ;

தெற்கு : திரு. எம். டபிள்யூ. டபிள்யூ. அபேரத்ன அவர்கள் உரிமைகோரும் நாகஹவத்தை அல்லாதவிடத்து தம்புகஹவத்தை எனும் காணி ;

மேற்கு : திரு. டபிள்யூ. ஏ. பெரேரா, திரு. டபிள்யூ. ஈ. பெரேரா மற்றும் திரு. எம். டபிள்யூ. டபிள்யூ. அபேரத்ன அவர்கள் உரிமைகோரும் நாகஹவத்தை அல்லாதவிடத்து தம்புகஹவத்தை எனும் காணி.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: திரு. பந்துல பியங்கர பெரேரா,
இல. 268, ரத்னாராம வீதி,
ஹோகந்தரை.

1- 768

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற நய்வலை நீர் உள்ளிளுப்பினை மேம்படுத்துவதற்கு அடுத்துள்ள காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும்' அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, திசெம்பர் 29.
5/2/1/1170.

**அட்டவணை**

கம்பஹா மாவட்டத்தில் மினுவங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 9 9/1, நய்வலை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் நய்வல எனும் ஊரில் அமைந்துள்ள நய்வலைவத்தை எனும் காணியில் காட்டப்பட்டுள்ள உரிமைபெற்ற நில அளவையாளர் ஏ. எஸ். எஸ். பெரேரா அவர்களினால் நிலஅளவையிடப்பட்ட திட்ட இல. 5020 இலுள்ள துண்டு இல. 26 ஆக காணப்படும் மொத்த பிரமாணத்திலிருந்து 15 பேர்ச்சஸ் (0.03794 ஹெக்டெயர்) வரையுள்ள கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்த காணித்துண்டு :-

வடக்கு : இத்திட்டதிலுள்ள 25 ஆம் காணித்துண்டு இலக்க காணி ;

கிழக்கு : இத்திட்டத்திலுள்ள காணித்துண்டு இல. 27 ஆக காட்டப்பட்டுள்ள வீதி ;

தெற்கு : இத்திட்டதிலுள்ள காணித்துண்டு இல. 28 ;

மேற்கு : திட்ட இல. 4994 இலுள்ள காணித்துண்டு இல. 02 ஆக காட்டப்பட்டுள்ள காணி.

காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி: திரு. ஆர். ஏ. மஹிந்த,
இல. 54, பலபோவ,
தெவலபொல.

1- 769

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.